# முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
## O.S. No. 334/2022

**Witness DW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசேகரன் | தொழில் | |
| த/பெ | ரங்கநாதன் | வயது | |
| ஊர் | | தேதி | 08.04.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (08.04.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

1. வழக்கு சொத்து உள்ள இடம் வடகுச்சிபாளையம் என்றுசொன்னால் சரி. அதன் சர்வே எண். 216/2 என்றால் சரி. அதன் விஸ்திரணம் 186 சதுரமீட்டர் என்றால் சரி. பழைய எண். 216. வழக்கு சொத்தானது பிள்ளையார் கோவில் தெருவிற்கு வடபுறத்தில் உள்ளது என்றால் சரி. மாரியம்மன் கோவிலுக்கு ஊரல் வாய்க்காலுக்கும் தெற்கில் உள்ளது என்றால் சரியல்ல ஊரல் வாய்க்காலுக்கு தெற்கில் என்பது தான் சரி. ஊரல் வாய்க்காலுக்கு வடபுறத்தில் மாரியம்மன் கோவில் உள்ளது என்றால் சரி. வழக்கு சொத்திற்கு கிழக்கில் கேசவ கவுண்டர் வகையறா சொத்து உள்ளது என்றால் அது தவறு. மேற்கில் சின்னத்தம்பி கவுண்டர் இடம் உள்ளது என்றால் தவறு. வழக்கு சொத்திற்கு பக்கத்தில் எங்களுக்கு சொத்து எதுவும்கிடையாது என்றால் எங்களது தாத்தாவான பாவாடை கவுண்டர் என்பவரது சொத்து உள்ளது. அவ்வாறு வழக்கு சொத்திற்கு அருகில் எங்களுக்கு எந்த சொத்தும் கிடையாது என்றுசொன்னால் சரியல்ல. 23.03.1970 ம் தேதி சுப்ரமணியன் மற்றும் எனது தகப்பனாருக்கு ஏற்பட்ட பாகபிரிவினையில் சர்வே எண். 216 பிள்ளையார் கோவிலுக்கு தெற்கில் உள்ள மனையை தான் ஒதுக்கி உள்ளனர் என்றுசொன்னால் அது தவறு. அது புறம்போக்கு நிலம். சர்வே எண். 217/1 10 செண்டில் 3 1/4 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றுசொன்னால் இல்லை அது புறம்போக்கு நிலம். 19.07.1975 ம் தேதி எனது தகப்பானாரும் எனது சகோதரர்கள் சரவணன் மற்றும் ரவி இளவராக காண்பித்து தெய்வசிகாமணி மனைவி பூரணி அம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டனர் என்றுசொன்னால் அது எனக்கு தெரியாது. 23.03.1970 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தின் வாயிலாக அவரவர்

சொத்தினை அவரவர் அனுபவித்து வந்தனர் என்றால் தவறு. எனது பெரியப்பாவான சுப்ரமணி என்பவருக்கு பாகமாக வந்த சொத்தினை அவர் அனுபவித்து வந்தார் என்றுசொன்னால் அது தவறு அவர் எந்த சொத்தினையும் அனுபவிக்கவில்லை சுப்ரமணியன் என்பவர் சொத்தினை அனுபவிக்கவில்லை என்று நான் வழக்கிற்காக தவறாக சொல்கின்றேன் என்றுசொன்னால் சரியல்ல. சுப்ரமணி என்பவரது பாகத்திற்கு வந்த சொத்தினை சுப்ரமணி மற்றும் அவரது மனைவி புஷ்பவதி அனுபவித்து வந்தனர் என்றாலும் புஷ்பவதி மகளான புனிதா என்பவருக்கு 17.07.2008 ம் தேதி தானசெட்டில்மெண்ட் வாயிலாக அந்த சொத்தினை எழுதி கொடுத்தனர் என்றால் அது எனக்கு தெரியாது சுப்ரமணி மற்றும் புஷ்பவதி ஆகியோருக்கு எந்த சொத்தும் கிடையாது. சுப்ரமணி அவரது மகளுக்கு 17.07.2008 ம் தேதி தானசெட்டில்மெண்ட் வாயிலாக அவரது மகளுக்கு எழுதி கொடுத்துவிட்டார் என்றுசொன்னால் அது எனக்கு தெரியாது. 17.07.2008 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் வாயிலாக பட்டா எண். 122 பட்டா பெற்றுள்ளார் என்றால் 2014ம் வருடம் பட்டா மாற்றம் செய்துகொண்டார். நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் பட்டா மாற்றம் செய்துள்ளார். புனிதா என்பவர் வழக்கு சொத்தை அனுபவித்து வந்து 21.09.2020 வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றுசொன்னால் அது எனக்கு தெரியாது. தற்போது வரை எனக்கு புனிதா வாதிக்கு கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. நான் பதிலுரை தாக்கல் செய்த சமயத்தில் புனிதா என்பவர் வாதிக்கு கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் நீதிமன்றத்தில் இருந்து மனு கிடைக்கப்பெற்று அதன் பின்னர் எனது வழக்கறிஞர் சொல்லியதன் பேரில் எனக்கு தெரியும். வழக்கு சொத்தானது வாதிக்கு தான் உரிமையானது என்று எனக்கு நன்றாக தெரிந்து தான் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றுசொன்னால் அப்படியெல்லாம் கிடையாது. புனிதா என்பவரது பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் உள்ளது என்று தெரிந்துகொண்ட பிறகு நான் அந்த பத்திரத்தினை ரத்து செய்ய வேண்டி ஏதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தது எனக்கு தெரியாது. உண்மையில் வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இருந்திருந்தால் உரிய நேரத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றுசொன்னால் 2013 ம் வருடம் வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கு 2017ம் வருடமே தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றுசொன்னால் சரி பின்னர் 2021 ம் வருடம் அவரே எனது வழக்கினை நீதிமன்றத்தில் நிலைநிறுத்தியுள்ளார். அந்த உத்தரவினை இந்தநீதிமன்றத்தில் கொடுத்தேனா என்றால் அது எனக்கு தெரியவில்லை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அவ்வாறு எந்த உத்தரவையும் தாக்கல் செய்யவில்லை என்றுசொன்னால் கொடுத்துள்ளேன். வழக்கு சொத்தில் எனக்கோ எனது தாயாருக்கோ

எனது சகோதரிக்கோ எந்தவித உரிமையும் கிடையாது என்றுசொன்னால் அனைவருக்கும் உரிமை உள்ளது. வழக்கு சொத்து இதர சொத்துக்கள் எனது தாத்தாவிற்கு உரிமையானது என்றாலும் அதனை தொடர்ந்து 1970 ம் வருடம் எனது தகப்பனாரும் சுப்ரமணியன் என்பவரும் பாகம் பிரித்துக்கொண்டனர் என்றும் அதன்பிறகு இருவரும் தனித்தனியாக அவரது சொத்தினை அனுபவித்து வந்தனர் என்றுசொன்னால் அவ்வாறு பாகம் எதுவும் பிரிக்கப்படவில்லை. 289/2013 என்ற வழக்கினை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் விழுப்புரத்தில் தாக்கல் செய்ய எந்த உரிமையும் கிடையாது என்றுசொன்னால் எனது தாத்தா சொத்து என்பதால் எங்கள் அனைவருக்கும் உரிமையானது. 23.03.1970 ம் தேதி சொத்து குறித்து ஏற்கனவே பாக பிரிவினை ஏற்பட்டுள்ளதால் மீண்டும் சொத்துக்கள் குறித்து பாக பிரிவினை கோர வழக்கு மூலம் இல்லை என்றுசொன்னால் எந்த பாகபிரிவினையும் செய்யப்படவில்லை. வாதியின் அனுபவத்தில் இருந்த சொத்தில் 12.07.2022 ம் தேதி வேலியை எடுக்க வந்ததால் தான் வாதி என் மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றுசொன்னால் அது எங்களுக்கு சொந்தமான சொத்து வாதிக்கு அதில் உரிமை இல்லை. வழக்கு சொத்து வாதிக்கு தான் உரிமையான சொத்து என்பதால் தாவா பேரில் தீர்ப்பாக வேண்டும் என்றுசொன்னால் சரியல்ல. சொத்துக்கள் அனைத்தும் எங்களுடையது. வழக்கு சொத்து எங்கள் அனுபவத்தில் இருந்தது என்பதற்கு பட்டா சிட்டா, வருவாய் ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. எனது தாத்தா பேரில் இருந்த பட்டாவின் வாயிலாக அனுபவித்து வருகிறோம். எனது தாத்தா பெயரில் இருந்த பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தினை உண்மையில் நான் அனுபவித்து வந்திருந்தால் அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றுசொன்னால் அதனை நான் ஒப்படைக்கின்றேன். அவ்வாறு சொத்தினை அனுபவித்து வருவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றுசொன்னால் சரியல்ல தாதத்தா பேரில் உள்ள மூலு பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் வாதியை அலைக்கழிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பொய்யாக கட்சி செய்தவருகிறேன் என்றுசொன்னால் இல்லை. தாவா பேரில் தீர்ப்பாக வேண்டும் என்றுசொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram